பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
31 03 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்

<u>தலைப்புச் செய்திகள் -</u>

- புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப் படுவதையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி இஸ்லாமிய பெருமகக்ளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் சமத்துவ மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
- மத்திய தொழில் பாதுகாப்புப்படை சார்பில் வளமான இந்தியா – பாதுகாப்பான இந்தியா என்ற விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இன்று கன்னியாகுமரியில் நிறைவடைகிறது.
- உத்திரபிரதேசத்தில் 582 கீழமை நீதிமன்ற நீதிபதிகளை பணியிடமாற்றம் செய்து அலகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி – கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

புனித ரமலான் பண்டிகை இன்று கொண்டாடப் படுவதையொட்டி பிரதமர் திரு நரேந்திர மோடி இஸ்லாமிய பெருமகக்ளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் இன்று சமூவ வலைதளததில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நம்பிக்கை, நல்லிணக்கம், அன்புடைமைய ஆகியவற்றை ஊக்குவிக்கும் திருநாளாக புனித ரமலான் பண்டிகையை கொண்டாட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

புனித ரமலான் பண்டிகையையொட்டி இஸ்லாமியர்கள் இன்று சிறப்பு தொழுகையில் ஈடுபட்டனர்.

**[]<<<>>>[]**

டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கரின் சமத்துவ மற்றும் ஜனநாயகக் கொள்கைகளை நிறைவேற்றுவதில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி மகாராஷ்டிர மாநிலம் நாக்பூரில் உள்ள தீட்ஷபூமியில் புத்தர் கோவிலில் மெழுகுவர்த்தி ஏந்தி வழிபட்டதை தமது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள திரு எல் முருகன், நம் ஒவ்வொருவரின் கண்ணியத்தையும், மேன்மையையும் கருத்தில் கொண்டு டாக்டர் அம்பேத்கர் அரசியல் சாசனத்தை எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

மத்திய தொழில் பாதுகாப்புப்படை சார்பில் வளமான இந்தியா — பாதுகாப்பான இந்தியா என்ற கடலோர விழிப்புணர்வு சைக்கிள் பேரணி இம்மாதம் ஏழாம் தேதி மேற்குவங்க மாநிலத்தில் தொடங்கியது.

இந்த பேரணி கன்னியாகுமரியில் இன்று நிறைவடைகிறது.

கடலோர பாதுகாப்பு, போதைப்பொருள் மற்றும் ஆள்கடத்தலை தடுப்பது, பெண் கல்வி உள்ளிட்டவை குறித்த விழிப்புணர்வை இப்பேரணியின் மூலம் ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - குமார் ) ---- 47 செகண்ட்*

**[]<<<>>>[]**

கிராமப்புற இளைஞர்கள் புத்தாக்க தொழில்களில் ஈடுபட முன்வர வேண்டுமென்று மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு கிஷன்ரெட்டி வலியுறுத்தியுள்ளார்.

ஹைதராபாத்தில் இன்று வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தொழில் முனைவோர் அலுவலகத்தை திறந்து வைத்து பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையிலான அரசு இளைஞர்கள் புதிய தொழில்களை தொடங்குவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருவதாகக் கூறினார்.

இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புக்களை உருவாக்கி தருவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டஇ அவர், 2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற இலக்கை எட்டுவதற்கு அனைவரின் ஒத்துழைப்பும் தேவை என்று அவர் குறிப்பிட்டார்.

தற்போது தொடங்கப்பட்டுள்ள வளர்ச்சியடைந்த பாரத்திற்கான தொழில் முனைவோர் அலுவலகம் மூலம் இளைஞர்களுக்கான உதவிகள் மட்டுமன்றி பயிற்சி. விழிப்புணர்வு பணி போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாகவும் திரு கிஷன்ரெட்டி தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

பிரதமரின் மீன்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பஞ்சாப் மாநிலத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் 618 மீனவ குடும்பங்களுக்கு 30 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அம்மாநில மீன்வளத்துறை தெரிவித்துள்ளது.

நீல புரட்சியை ஏற்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்டள்ள இந்த திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 81 ஆயிரம் டன் நன்னீர் மீன்கள் பிடிக்கப்பட்டு சந்தைப்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவளத்தை மேம்படுத்துவதற்காக தனியார் மற்றும் பஞ்சாயத்துக்கள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள குளங்களுக்கு 43 ஆயிரத்து தொள்ளாயிரம் ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

மீனவர்களுக்கு புதிய தொழில்நுட்பங்களை கற்றுத்தரும் நோக்கில் கருத்தரங்குகள் நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரின் மீன்வள மேம்பாட்டு தீட்டத்தின் சிறப்பான செயல்பாடுகள் காரணமாக நன்னீர் இறால் உற்பத்தி கணிசமாக அதிகரித்துள்ளதாகவும், இதற்கென ஆயரம் ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் பஞ்சாப் அரசு கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள மியான்மருக்கு இந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேசிய பேரிடர் மீட்புப்படையினர் **U Hla Thein** புத்த மடாலயத்தில் மீட்புப் பணிகளை தொடங்கியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் 170-க்கும் மேற்பட்ட புத்த துறவுகள் இடர்பாடுகளுக்குள் சிக்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

இந்திய படையினர் மருத்துவமனைகளுக்குச் சென்று தேவையான மருத்துவ உதவிகளை நாளை முதல் வழங்க உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபரேஷன் பிரம்மா திட்டத்தின் கீழ் மியான்மர் சென்றுள்ள இந்திய பேரிடர் மீட்புப் படையினர் **sky villa** பகுதிக்குச் சென்றுள்ளதாகவும், அப்பகுதியில் 11 மாடிகள் கொண்ட நான்கு கட்டிடங்கள் பூகம்பத்தால் இடிந்து விழுந்துள்ளதாகவும் வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

பேரிடர் மீட்புப் படையினர் கொண்டு சென்றுள்ள நிவாரண உதவிப் பொருட்களை அங்குள்ள அரசு அதிகாரிகளிடம் ஒப்படைப்பார்கள் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**[]<<<>>>[]**

உத்திரபிரதேசத்தில் 582 கீழமை நீதிமன்ற நீதிபதிகளை பணியிடமாற்றம் செய்து அலகாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ள உயர்நீதிமன்ற இணைப்பதிவாளர் திரு சதிஷ்குமார் புஷ்கார், இது வழக்கமான ஆண்டு பணியிட மாற்றம் என்று கூறியுள்ளார்.

236 கூடுதல் மாவட்ட நீதிபதிகளும், 346 சிவில் நீதிபதிகளின் பணியிட மாற்றத்திற்கும் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், உடனடியாக புதிய இடங்களில் அவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அந்த உத்தரவில் அவர் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

சத்திஷ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் இன்று அதிகாலை முதல் பாதுகாப்புப் படையினர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை தேடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பாதுகாப்புப்படையினரை நோக்கி தாக்குதல் நடத்திய மாவோயிஸ்ட் தீவிராதிகள்மீது, பதில் தாக்குதல் நடத்தியபோது பெண் மாவோயிஸ்ட் ஒருவர் கொல்லப்பட்டார்.

அந்த பெண்ணின் உடலை கைப்பற்றியதுடன், அவர் வைத்திருந்த துப்பாக்கி மற்றும் வெடி பொருட்களையும் பாதுகாப்புப் படையினர் கைப்பற்றியுள்ளனர். தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் கோடை சீசன் தொடங்கியதை அடுத்து உதகை தாவரவியல் பூங்கா உள்ளிட்ட ஏழு முக்கிய சுற்றுலா தலங்களில் நாளை முதல் மூன்று மாதங்களுக்கு சினிமா படப்பிடிப்பு நடத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகை தருவதால் அவர்கள் சிரமமின்றி பூக்காக்களை பார்வையிட ஏதுவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தோட்டக்கலைத்துறை தெரிவித்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

**[]<<<>>>[]**

தாய்லாந்தில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அத்துமீறி செல்ல முயன்ற சீனாவைச் சேர்ந்த நான்கு பேரை பாங்காக் காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

பூகம்பத்தால் இடிந்து விழுந்த பகுதிளில் செயல்பட்டு வந்த அலுவலகங்களிலிருந்து 32 ஆவண கோப்புகளை இவர்கள் அபரிக்க முயன்றதாகவும், இது குறித்து மேலும் புலன் விசாரணை நடைபெற்று வருவதாகவும் காவல்துறை கூறியுள்ளது.

சீனா-வைச் சேர்ந்த கட்டுமான தொழில் நிறுவனத்தின் கோப்புகளை அவர்கள் கைப்பற்ற முயன்றபோது அவர்கள் காவல்துறையினரிடம் பிடிபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

இஸ்ரேல் பாதுகாப்புப் படையின் அடுத்த இயக்குநராக அந்நாட்டின் ஓய்வுபெற்ற கடற்படை அதிகாரி வைஸ் அட்மிரல் **Eli sharvit**-ஐ அந்நாட்டு பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு நியமித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023-ஆம் ஆண்டிலிருந்து நடத்தி வரும் தாக்குதல் குறித்த ஆய்வுக் கூட்டத்திற்குப் பின் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் புலனாய்வு தகவல்களைப் பெறுவது மற்றும் இஸ்ரேலிய படைகளின் தயார் நிலையில் ஒரு சில குறைபாடுகள் இருந்ததாக கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து அந்நாட்டு பாதுகாப்பு முகமையின் தலைமை பொறுப்புக்கு புதிய அதிகாரி நியமிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி — கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் இப்போட்டிஇரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டி, ஸ்பெயினில் இன்று தொடங்குகிறது.

இன்று நடைபெறும் தகுதிச்சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - ஸ்பெயினின் **Miguel damas** ம-ஐ எதிர்கொள்கிறார்.

இப்போட்டி பிற்பகல் மணி 1-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

உலக கோப்பை குத்துச்சண்டைப் போட்டி பிரேஸிலில் இன்று தொடங்குகிறது.

வரும் 5-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில், 19 நாடுகளைச் சேர்ந்த 130 வீரர்கள் பங்கேற்கின்றனர்.

நரேந்தர் தலைமையிலான 10 பேர் கொண்ட இந்திய அணி இப்போட்டியில் பங்கேற்கவுள்ளது.

**[]<<<>>>[]**